# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,495 — 1965 සැප්තැම්බර් 3 වැනි සිකුරාදා — 1965.9.3

14,495 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 3 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 285 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. .. | 290 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 287 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | 291 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 287 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 290 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | — | நானுவித அறிவித்தல்கள் .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. **படிகள்.**—வேறுவிதமாய்ச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. **சேவைக்குரிய நிபந்தனைகள்.**—அரசாங்க சேவைக்கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிகும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. **நியமன விதிகள்.**—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குப்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள்வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினுல் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினுலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை அரசாங்கம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாது அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) "சந்தர்ப்பத்துக்குத் தக்கதாக இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்ட/இளைப்பாற்றுச் சம்பளத்துக்குப்படாத பதவிகளுக்கு நியமிக்கப்படும்" புதிய உத்தியோகத்தர்களுக்குரிய தகுதிகாண்காலம்/பரீட்சாகாலம் ஏதும் பதவிகளுக்குரிய அக்காலம் 3 ஆண்டுகளுக்கு மேலாகவிருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டால் ஒழிய 3 ஆண்டுகளாகும்.

(ii) "புதிய உத்தியோகத்தர்" ஏற்கனவே இயற்றப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு அல்லது அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அமுல் நடத்துவதற்கு, அதிலும் விசேடமாக, 1956 ஆம் ஆண்டின் 33 ம் இல. அரசாங்க மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையிற் கொண்டுவருதற்கு இனிச் செய்யப்படக்கூடிய பிரமாணங்களுக்கு இயைய நடத்தல் வேண்டும்.

(iii) (அ) இவ்வுத்தியோகத்தர்கள் தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்களமொழியறிவைப் பெறவேண்டும்.

(ஆ) தகுதிகாண்கால/பரீட்சைகால முடிவில் அவர்களின் நியமன ஊர்ஜிதம், வேறு விடயங்களுடன் சிங்கள மொழியில் ஓர் தேர்வுப்பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்திருக்கும்.

தகுதிகாண் நிலைக்காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்கள மொழியறிவுப் பரீட்சையில் விதிக்கப்பட்ட தரத்தை எய்தத் தவறுபவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட ஆளாவர்; ஆனுல் குறித்தவோர் உத்தியோகத்தர் அரசாங்க மொழியில் அறிவைப் பெறுவதற்கு மனப்பூர்வமாக முயற்சித்திருக்கிருர் என்று நியமனம் செய்யும் அதிகாரி கருதுவாராளுல் குறித்த பதவி நீக்கம் பின்போடப்படலாம். உரிய திகதிக்குப்பின் நியாயமான அளவு காலத்துக்குள் குறித்த உத்தியோகத்தர் குறித்த பரீட்சையிற் சித்தி எய்துவாராளுல், சிரேட்டத்துவம் இழப்பதும் இல்லாமற் போகலாம்.

(iv) சிங்கள மொழிமூலம் அரசாங்க உத்தியோகத்திற் சேர விரும்பும் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியறிவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்ற விதியிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

குறிப்பு.—" புது உத்தியோகத்தர் " என்பது இங்கே, 1956 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்குப் பின் அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களாய் 1957 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதியைக் கொண்ட 379 ஆம் இல. திறைசேரிச் சுற்றுநிருபத்தின் உபபந்திகள் 2 (ii) (B), 2 (ii) (C) என்பனவற்றுக்கிணங்கப் பழைய உத்தியோகத்தர்களாயில்லாதவர்களைக் கருதும்.

5. **வேண்டியதகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். " இலங்கையர் " என்பவர் வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப் பாதுகாப்புப்படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேரக் கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு, அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்குமுன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற விதிகள்.—(i) அரசாங்க சேவையிலுள்ள தகைமையுள்ள உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் அன்னவரின் திணைக்களத்தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அத்தகைய உத்தியோகத்தர் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக, முடிவுத் திகதியிலன்றோ அதன் முன்னரோ அதனைப் பெறக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர்கள் அனுப்பும்போது குறித்த விண்ணப்பதாரர்கள் (தெரிவு செய்யப்பட்டால்) விடுவிக்கப்படுவார்களா அன்று என்பதை கருமமுறைக் கைநூலின் 109 ஆம் பரிபாலன ஒழுங்கின் பிரகாரம் குறிப்பிடல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச்செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்துச் சிபாரிசு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவுதேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக் குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாகிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தெரிவுசெய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப் படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

## ஒலிபரப்புத் தகவல் பகுதி

### பகுதி நேர அறிவிப்பாளர்—தமிழ்

ஒலிபரப்புப் பகுதியில் பகுதி நேர தமிழ் அறிவிப்பாளராகக் கடமையாற்ற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவு செய்யப்படுவோருக்கு மணித்தியாலம் 1 ரூபா 75 சத வீதப்படி வேதனம் வழங்கப்படும். நாளொன்றுக்கு வழங்கத்தக்க ஆகக்கூடிய வேதனம் 12 ரூபா. போக்குவரத்துக்கான மேலதிகப்படியோ வேறு எவ்வித மேலதிகப்படியோ வழங்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர் "மைக்ர போன்" தெரிவு பரிசோதனையிலும் நேர்முகப்பரீட்சையிலும் தேர்ச்சி யடைவதுடன் தெரிவு செய்யப்படுமிடத்து சொற்ப காலத்துக்குப் பயிற்சி யும் பெற வேண்டும். பயிற்சிக் காலத்தில் வேதனம் வழங்கப்படமாட்டாது. பயிற்சிக்காலத்தின் பின் உத்தியோகம் வழங்கப்படும் என்ற உறுதி இடையாது. அங்கீகரிக்கப்படுவோர், இப்பகுதியில் காலியாகும் எந்த உத்தியோகத்துக்கும், உரிமை கோரவும் முடியாது. பகுதிநேர அறிவிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் இந்த ஸ்தானத்தின் வழமையான உத்தியோகத்தராகக் கவனிக்கப்படமாட்டார்கள். இப்பகுதியிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பகுதிநேர அறிவிப்பாளர் அட்டவணைப்படி தேவை கோரப் படும்போது கடமையாற்ற அழைக்கப்படுவர்.

2. விண்ணப்பதாரர் 18 க்கும் 40 க்கும் உட்பட்ட வயதுடையவர்களா யிருப்பதோடு எஸ். எஸ். ஸி. அல்லது அதற்கு மேற்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகவோ அல்லது இதற்கு முன் ஒலிபரப்புத் துறை யில் அனுபவம் பெற்றவர்களாகவோ இருத்தல் வேண்டும். சிறந்த தமிழ் அறிவு இன்றியமையாதது. ஆங்கிலம் அல்லது சிங்களத்தில் நியாயமான அறிவு பெற்றிருப்பின் மேலதிகமான யோக்கியதாம்சமாகக் கருதப்படும். ஒலிபரப்பு தகவல் பகுதியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் இந்த யோக்கியதாம்சங்களை பெற்றிருந்தால் அவர்களும் இப் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர் ரொரிங்ரன் சதுக்கத்திலுள்ள இலங்கை வானொலி நிலையத்திலிருந்து 6 மைல் சுற்றளவுக்குள் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பங்கள் இத்துடன் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பத் தாள் வடிவில் அமைந்ததாய் ஒலிபரப்பு, தகவல் மா-அதிகாரி, இலங்கை வானொலி, கொழும்பு 7 என்ற விலாசத்துக்கு 1965.9.17ம் திகதிக்கு முன் வந்து சேரத்தக்கதாய் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்பப்படமாட்டா. கடிதக்கூட்டில் இடது தலைப்பில் "பகுதி நேர அறிவிப்பாளர்—தமிழ்" என்று தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

4. விண்ணப்பங்களும் அதுபற்றிய பிற கடிதங்களும் ஒலிபரப்பு, தகவல் மா-அதிகாரியின் விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டுமேயன்றி இப்பகுதியிலுள்ள யாருடைய சொந்தப் பெயருக்கும் விலாசமிட்டு அனுப்பப்படலாகாது.

5. விண்ணப்பங்கள் கிடைத்த விபரம் அறிவிக்கப்படமாட்டாது.

வின்சன் பண்டித,
பதில் ஒலிபரப்பு, தகவல் மா-அதிகாரி.

### மாதிரி விண்ணப்பத்தாள்

#### பகுதி நேர தமிழ் அறிவிப்பாளர் பதவி

1. முழுப்பெயர் :————.
(தெளிவான எழுத்தில்.)
(அ) சொந்தப்பெயர் :————.
(ஆ) பிறபெயர்கள் :————.

2. நிரந்தர விலாசம் :————.

3. (அ) 1965.9.17 ம் திகதியன்று சரியான வயது :————.
வருடங்கள் :———— மாதங்கள் :———— நாட்கள் :————.
(ஆ) பிறந்த தேதியும் இடமும் :————.
(பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்.)

4. தேசீய இனம் :———— .
(பதிவு செய்யப்பட்ட இலங்கையரா ? பரம்பரை இலங்கையரா?)

5. கல்வித் தராதரம் :————.
(அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்.)

6. ஒலிபரப்பு அனுபவம் பற்றிய விபரம் :————

7. விண்ணப்பதாரரின் வாசஸ்தலத்திலிருந்து ரொரிங்ரன் சதுக்கத்திலுள்ள இலங்கை வானொலி நிலையத்துக்கு உள்ள தூரம் :————.

8. நற்சாட்சிப்பத்திரங்கள் அளித்தவர்களின் பெயரும் விலாசமும் :————.
(பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

9. தேர்ந்தெடுக்க உதவக்கூடிய விசேஷ உரிமைகள், யோக்கியதாம்சங்கள், அல்லது அனுபவம் பற்றிய விபரம் :————.

10. எப்போதாவது அரசாங்க சேவையில் இருந்ததுண்டா ? உண்டெனில் எப்போது, எங்கே, எம்முறையில்.————.
(ஒவ்வொரு பகுதியிலும் சேவையிலிருந்த காலவிபரம் குறிப்பிடுக.)

————,
கையொப்பம்.

திகதி :————.

9–110—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திறைசேறி இல. 1/23/8/11 (அ)

### பேச்சு மொழிபெயர்ப்பாளர்க்குப் பரீட்சை—நவம்பர் 1965

பேச்சு மொழிப்பெயர்ப்பாளராகத் தகைமைபெறவிரும்பும் பொது எழுது வினைஞர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு 1965, நவம்பர் 6 ஆந் தேதி தொடங்கிப் பரீட்சைக் கொமிசனரினால் கொழும்பில் பரீட்சை நடாத்தபபடும்.

2. இதன் விவரங்களுக்கு இவ்வர்த்தமானியின் பகுதி I, பிரிவு II இல் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் காணப்படும் அறிவித்தல் களைப் பார்க்க.

ச. எ. குறே,
மேலதிக திறைசேரிப் பிரதிச் செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு,
1965, ஒகத்து 19 ந் திகதி

9–26—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### உபயோகமற்ற மோட்டார் வண்டிகள் விலைக்கு வாங்குவதற்கான ஒப்பந்தக் கேள்விகள்

1ஸ்ரீ. 9311, 1ஸ்ரீ. 9748, ஈ. என். 8732 இலக்கங்கள் உள்ள விலீஸ் ஜீப் வண்டிகள் வாங்கிக்கொண்டு போதற்கான ஒப்பந்தக் கேள்விகள் கொழும்பு 3, கீழ்வாவித் தெரு, சமூக சேவைப் பகுதி ஒப்பந்தக் கேள்விச் சபைத் தலைவரால் 17 ந் திகதி செப்டம்பர் மாதம், 1965 ம் ஆண்டு, மு. ப. 9.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வண்டிகள் தற் போதுள்ள நிலையில் விற்கப்படும்.

2. இவ்வண்டிகளை இக்கந்தோரில் கந்தோர் நடக்கும் நேரத்தில் பார்வையிடலாம்.

3. கச்சேரியில் அல்லது சமூகசேவை தலைமைக் காரியாலயத்தில் ஒப்பந்தக் கட்டுப்பணம் ரூபா 50 கொடுத்துப் பெற்ற பற்றுச்சீட்டை கொழும்பு 3, கீழ்வாவித் தெரு, சமூகசேவை அதிபருக்குக் காட்டி அவரிடம் பெறும் மாதிரிப் பத்திரங்களில் இரட்டைப் பிரதியில் ஒப்பந்தக் கேள்விகள் எழுதவேண்டும். ஒருவரின் ஒப்பந்தக் கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று எழுதி அனுப்பும் அறிவித்தலைப் பெற்ற 5 நாட் களுக்குள் அவர் தான் விலை கேட்ட முழுத்தொகையையும் கட்டாவிட் டால் அவருடைய கட்டுப்பணம் அரசாங்கத்துக்குரியதாகி, வண்டியும் வேறோர் ஒப்பந்தக்காரருக்குக் கொடுபடும். வண்டியைப் பெறுபவர் அதன் முழுத்தொகையையும் கட்டின மூன்று நாட்களுக்குள் வண்டியை இவ்விடத்திலிருந்து கொண்டு போகவேண்டும்

4. எந்த ஒரு வண்டிக்கோ அல்லது மூன்று வண்டிகளுக்கோ, ஒப்பந்தக் கேள்விகள் அனுப்பலாம்.

5. ஒப்பந்தக் கேள்வி மாதிரிப் பத்திரங்கள் 15 ந் திகதி செப்டம்பர் மாதம் பி. ப. 4 மணிவரை கொடுபடும்.

6. ஒப்பந்தக் கேள்விகள் அவை வைத்துள்ள உறைகள் மேல் அரக்கு முத்திரை (ஸீல்) இடப்படும், "ஜீப் வண்டிகள் விலைக்கு வாங்குவதற் கான ஒப்பந்தக்கேள்வி" என்று குறிப்பிடப்படும். கொழும்பு 3, கீழ் வாவித் தெரு, சமூக சேவைப் பகுதி ஒப்பந்தக் கேள்விச் சபைத்தலைவர் எனும் விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

7. ஒப்ந்தக் கேள்விகள் பதிவுசெய்யப்பட்ட தபாலில் அனுப்பவேண்டும். பதிவுசெய்யப்பட்ட தபாலில் ஒப்பந்தக் கேள்விகள் அனுப்ப விரும்பாத ஒப்பந்தக்காரர் அதற்கென கொழும்பு 3; கீழ்வாவித் தெரு, சமூக சேவைப் பகுதியில் வைத்திருக்கும் ஒப்பந்தக் கேள்விப் பெட்டியில் தங்கள் ஒப்பந்தக் கேள்விகளைப் போடலாம். ஒப்பந்தக்காரரின் பெயரும் விலாசமும் உறைமேல் எழுதப்பட்டிருக்கவேண்டும். அங்ஙனம் போட்ட ஒப்பந்தக் கேள்விக்கு வேண்டுமாயின் காரியாலய உதவியாளரிடம் ஒரு பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

8. ஒப்பந்தக் கேள்விகளில் செய்யும் ஒவ்வொரு திருத்தத்துக்கும் அழித்தலுக்கும் அருகில் ஒப்பந்தக்காரர் முதலெழுத்து ஒப்பம் இட வேண்டும்.

9. ஒப்பந்தக் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாளுக்குப் பின் நான்கு கிழமை காலத்துக்கு அவற்றில் எவ்வித மாற்றமும் செய்ய ஒப்பந்தக்காரர் கோரமாட்டார்கள் என்று காத்திருக்கப்படுகிறது.

10 ஒப்பந்தக் கேள்விகள் கொழும்பு 3, கீழ்வாவித் தெரு, சமூக சேவை அதிபரின் காரியாலயத்தில் 17 ம் திகதி செப்டம்பர் மாதம், 1965 ம் ஆண்டு, மு. ப. 10 மணிக்குத் திறக்கப்படும்.

11. ஒப்பந்தக்காரர் அங்ஙனம் விரும்பின் அவர்களாயினும் அவர்க ளுடைய பிரதிநிதிகளாயினும் ஒப்பந்தக் கேள்விகள் திறபடும்போது சமூகமாய் இருக்க அனுமதிக்கப்படுவர்.

12. 3 ஆம் பந்தியின் நிபந்தனையைக் கவனித்து ஒப்பந்தக் கட்டுப் பணங்கள் திருப்பிக் கொடுபடும்.

13. ஒப்பந்தக் கேள்விகளில் சிலவற்றையேனும் யாவற்றையுமேனும் நிராகரிக்க அரசாங்கத்துக்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

14. வேண்டிய வேறு விபரங்களைச் சமூக சேவை அதிபரிடம் பெறலாம்.

ஆர். எல். திருச்செல்வம்,
சமூக சேவை அதிபர்.

சமூக சேவைப் பகுதி,
கீழ்வாவித் தெரு,
த. பெ. 577, கொழும்பு 3,
1965 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 24 ந உ.

9–31—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

### சமூக சேவைப் பகுதி

வத்தகாமம் குருடர் நன்னிலையத்திற்கு பாண், மற்றும் இனிப்புத் தீன்பண்டங்கள் முதலியனவற்றிற்கான (முதல் இறுதி நாட்கள் உட்பட) ஒக்ரோபர் மாதம் 1 ம் திகதிவரை ஒப்பந்தக் கேள்விகள் கீழே கையொப்பம் இட்டுள்ளவரால் 1965.9.17 ந் திகதி மு.ப. 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இதற்காய ரூபாய் இருபத்தைந்து (ரூ. 25) கச்சேரியில் கட்டி அதன் பற்றுச்சீட்டைக் காட்டிக் கீழே கையொப்பம் இட்டுள்ளவரிடம் மாதிரிப் பத்திரங்கள் பெற்று, அவற்றின் மேல் ஒப்பந்தக் கேள்விகள் செய்ய வேண்டும்.

ஒப்பந்தக் கேள்வி அனுப்பும் உறையின் இட மேற்கோணத்தில் "பாண், இனிப்புத்தீனி முதலியவை அளித்தற்கான ஒப்பந்தக் கேள்வி" என்று எழுதி, அரக்கு முத்திரை இட்டு, பதிவு செய்த தபாலில் அனுப்பவேண்டும்.

விலை விகித குறிப்புப் பத்திரத்தில் தொகைகளை இலக்கங்களிலும் எழுத்திலும் குறிப்பிட்டு, அதை ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்துடன் அணைத்து அனுப்பவேண்டும்.

ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் காலம் முடிவானவுடன் அவை திறக்கப்படும் அந்நேரம் ஒப்பந்தக் கேள்விக்காரர் சமூகமா யிருக்கலாம்.

வேறு விபரங்களை வத்தேகம குருடர் வேலைத்தளத்து முகாமையாளர் காரியாலயத்தில் பெறலாம்.

டாக்டர் ஆர். எல். திருச்செல்வம்
சமூக சேவை அதிபர்.

சமூக சேவைப் பகுதி,
கீழ்வாவித் தெரு,
கொழும்பு,
1965 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 13 ந உ.

9–4—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

## சமூக சேவைப் பகுதி

வத்தகாமம் குருடர் நன்னிலைப்படுத்தற் பயிற்சி நிலைய அழுக்குத் துணிகளை (முதல் இறுதி நாட்கள் உட்பட) ஒக்கோபர் 1 ம் திகதி முதல் 1966, செப்ரம்பர் 30 ம் திகதிவரை சலவை செய்தற்கான ஒப்பந்தக் கேள்விகள் கீழே கையொப்பம் இட்டுள்ளவரால் 1965.9.17 ந் திகதி மு. ப. 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. இதற்கான ரூபா இருபத்தைந்தை ஒரு கச்சேரியில் கட்டி அதன் பற்றுச்சீட்டைக் காட்டி கீழே கையொப்பம் இட்டுள்ளவரின் காரியாலயத்தில் மாதிரிப்பத்திரங்கள் பெற்று அவற்றின்மேல் ஒப்பந்தக் கேள்விகள் செய்யவேண்டும்.

3. தபால்மூலம் ஒப்பந்தக் கேள்வி மாதிரிப் பத்திரங்கள் கேட்பவர்கள் விண்ணப்ப இறுதி நேரத்திற்குமுன் தங்கள் ஒப்பந்தக் கேள்விகள் கிடைக்கும்பொருட்டு, ஏற்கனவே கட்டுப்பணப் பற்றுச்சீட்டை அனுப்பி வேண்டிய மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. ஒப்பந்தக் கேள்வி அனுப்பும் உறையின் இடமேற்கோணத்தில் " அழுக்குத் துணிகள் சலவை செய்தற்கான ஒப்பந்தக் கேள்வி " என்று எழுதி அரக்கு முத்திரை இட்டு பதிவு செய்த தபாலில் அனுப்பவேண்டும். பதிவு செய்த தபாலில் தங்கள் ஒப்பந்தக் கேள்விகளை அனுப்ப விரும்பாத ஒப்பந்தக் கேள்விக்காரர் அவற்றைக் கொழும்பு 3, கீழ் வாவித் தெரு, சமூக சேவைப் பகுதியில் இதற்கென வைத்துள்ள ஒப்பந்தக் கேள்விப் பெட்டியில் போடலாம். தபால் உறையின்மேல் ஒப்பந்தக் கேள்விக் காரரின் விலாசம் கொடுபட்டிருக்கவேண்டும்.

5. விலை விகிதங்களை ஒப்பந்தக் கேள்விப் பத்திரத்தில் இலக்கங்களிலும் சொற்களிலும் தெளிவாய் எழுதவேண்டும்.

6. தெரிந்தெடுக்கப்படும் ஒப்பந்தக் கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்து ஒப்பந்த வேலையைத் தொடங்குமுன் ரூபா 50 பிணை கட்டவேண்டும். ஒப்பந்த வேலை திருப்தியாய் முடிவடைந்ததும் பிணைக்கட்டுப்பணம் திருப்பிக் கொடுபடும்.

7. ஒப்பந்தக் கேள்விக்காரர் ஒருவர் அவருடைய விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டது என்று அறிவிக்கப்பட்டதும் ஒப்பந்தம் செய்ய, மறுத்தால் அல்லது தவறினால் அல்லது கேட்ட பிணையைக் கொடுக்கத் தவறினால் அவர் தனது ஒப்பந்தக் கேள்வி விண்ணப்பக் கட்டுப்பணத்தை இழப்பர்.

8. 7 ஆம் பந்தியின் நிபந்தனைக்கு அமைய ஒப்பந்தக் கேள்விக் கட்டுப்பணம் திருப்பிக கொடுபடும்.

9. ஒப்பந்தக் கேள்விகள் எற்கும் இறுதி நேரம் கழிந்ததும் ஒப்பந்த கேள்விகள் திறந்து பார்க்கப்படும். அவ்வேளை ஒப்பந்தக் கேள்விக்காரர் சமூகமாய் இருக்கலாம்.

10. மற்றும் விபரங்களைக் கொழும்பு 3, கீழ் வாவித் தெரு, த. பெ. இல. 577, சமூக சேவை அதிபர் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

டாக். ஆர். எல். திருச்செல்வம்.
சமூக சேவை அதிபர்

சமூக சேவைப் பகுதி,
கீழ் வாவித் தெரு,
கொழும்பு,
1965 ம் ஆண்டு ஒகத்து மீ 13 ந் உ.

9-5—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல .14,495

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கண்டி உபபிரிவு

கண்டியிலுள்ள டம்பராவ குளம் திருத்துதற்காக கேள்விப் பத்திரங்கள் கண்டியிலுள்ள மத்திய பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 29 ம் திகதி 10 மணிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதன்பின் உடனே திறந்து பார்க்கப் படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 30,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் கூட்டுறவுச் சங்கங்களும் மாத்திரம் இக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையோர் ஆவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் கண்டி, மாத்தளை, மினிப்பே, நுவரெலியா, கசலக்க ஆகிய இடங்களில் உள்ள உபபிரிவு நீர்ப்பாசன அலுவலகங்களில் அலுவலக நேரங்களில் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 3 ம் திகதி தொடக்கம் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27 ம் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். இக்கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப்புத்தகங்களுடன் தாம் இத் திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தி இக் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசன அலுவலகத்தில் ரூபா 50 கேளவிக் கட்டணங்களாக செலுத்தப்பட வேண்டும். இக்கேள்விக் கட்டணத்தை ஒரு கச்சேரியில் செலுத்தி பற்றுச்சீட்டு காட்டினாலும் போதுமானது. கிராம அபிவிருத்திச் சங்கங்களும் கூட்டுறவுச் சங்கங்களும் வெற்றுப் பத்திரங்கள் பெறுவதற்கு கேள்விக் கட்டணங்கள் செலுத்தத் தேவையில்லை.

4. சீமெந்து, இரும்பு, கியூம் பயிப் முதலிய பொருட்கள் குண்டசாலையில் உள்ள பண்டகசாலையில் இருந்து கொடுக்கப்படும்.

5. இக்கேள்வியைப் பற்றிய மேலதிக விபரங்களை அதே நீர்ப்பாசன அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ட. பெ. பாத்தலோ,
நீர்ப்பாசனப் பொறுப்பாளர்,
கண்டி உபபிரிவு.

நீர்ப்பாசனக் கந்தோர்,
கண்டி, 20.8.1965.

9-30—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கண்டி உபபிரிவு

பிறிம்பான கேள்விப்பத்திரங்கள் கண்டியிலுள்ள மத்தியபகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 29 ம் திகதி 10 மணி வரைக்கும் வற்றுக் கொள்ளப்படும். அதன்பின் உடனே திறந்து பார்க்கப்படும்.

(1) முறப்பொல எல ½ மைல் மிகுதியாக்குதல், உடைகல் கட்டுவேலை வாய்க்கால், சீமேந்து கொங்கிறீற் வழி வாய்க்கால், டவல்ஸ் அமைத்துத் தருதல்.

(2) முறப்பொல எல ½ மைல்–1 மைல் மிகுதியாக்குதல், ஒரு மைலுக்கு உடைகல் வழி வாய்க்கால், சீமேந்து கொங்கிறீற் வழிவாய்க்கால், டவல்ஸ் அமைத்துத் தருதல்.

(3) முறப்பொல எல ஒரு மைல் மிகுதியாக்குதல், காடு அழித்தல், பூமி அகழ்தல், பாறை அகழ்தல், புறகற்றை பதித்தல்.

(4) முறப்பொல எல ஒரு மைல் மிகுதியாக்குதல், 23 மைலிலுள்ள கட்டிட அமைப்புகள்.

2. நீர்ப்பாசனப் திணைக்களத்தில் (1) வதும் (2) வதுக்கும் ரூபா 40,000 க்கும் அதற்கு மேலும், (3) க்கு ரூபா 35,000 க்கும் அதற்கு மேலும், (4) வதுக்கு ரூபா 15,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் கூட்டுறவுச் சங்கங்களும் மாத்திரம் இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையோர் ஆவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் கண்டி, மாத்தளை, மினிப்பே, நுவரேலியா ஆகிய இடங்களிலுள்ள நீர்ப்பாசன அலுவலகங்களில் அலுவலக நேரங்களில் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 3 ம் திகதி தொடக்கம் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27 ம் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். இக் கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தி இக் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். பெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசன அலுவலகத்தில் 1, 2, 3 க்கு 50 ரூபா கேள்விக்கட்டணங்களாகவும், 4 க்கு ரூபா 25 ம் செலுத்தப்பட வேண்டும். ஒரு கச்சேரியில் செலுத்தி பற்றுச்சீட்டு காட்டினாலும் போதுமானது.

4. சீமேந்து, இரும்பு ஆகிய பொருட்கள் குண்டசாலையிலுள்ள பண்டகசாலையிலிருந்து கொடுக்கப்படும்.

5. இக்கேள்வியைப் பற்றிய மேலதிக விபரங்களை அதே நீர்ப்பாசன அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ட. பெ. பாத்தலோ,
நீர்ப்பாசனப் பொறுப்பாளர்,
கண்டி உப பிரிவு.

நீர்ப்பாசனக் கந்தோர்,
கண்டி, 1965 ம் ஆண்டு ஒக்ஸ்ட் மீ 23 ந் உ.

9-74—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

## நீர்ப்பாசன திணைக்களம்

### நுவரெலியா உப-பிரிவு

நுவரெலியா உபபிரிவில் பொருட்கள் கொண்டு செல்தல், 1965-66

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூ. 15,000 திற்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக் கேள்விப்பத்திரத்திற்கு சமர்ப்பிக்க தகுதியுடையவராவர்.

3. கேள்விப்பத்திரங்கள் 29.9.65 ம் திகதி காலை 10 மணிவரை கண்டி மத்திய பகுதி நீர்ப்பாசன பொறியியலாளரால் ஏற்கப்படும். இக் கேள்விக்குரிய வெற்றுப்பத்திரங்கள் நுவரெலியாவிலுள்ள நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 3.9.65 லிருந்து 27.9.65 வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்விக்காரராக முன்வருவோர் தங்கள் பதிவு புத்தகங்களுடன் தாம் இப்போது மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமாவென்றறிய நீர்ப்பாசன பொறியியலாளருக்கு பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் ரூபா 25/- பொறியியலாளரின் அலுவலகத்தில் அல்லது ஓர் கச்சேரியில் கேள்விச் கட்டணமாக செலுத்திப் பற்றுச்சீட்டை காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்வியைப் பற்றிய மேலதிமகான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. எஸ். டி சில்வா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
நுவரெலியா உபபிரிவு.

9-93—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

---

## நீர்ப்பாசனப் பகுதி

### மாத்தளை உப-பிரிவு

கீழ்க்கண்ட வேலைக்கு கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்பட்டு 27.8.65 திகதியின் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்திய விளம்பரத்தை பார்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நபரல குளத்தின் இடது பக்கத்து பிரதான வாய்க்கால் வெட்டுதல்.

இவ்வேலைக்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியை 22.9.65 ம் திகதி வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

எஸ். சோமசுந்தரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மாத்தளை.

9-126—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

---

## விலைப்பட்டியல் அனுப்புவதற்கான அறிவித்தல்

### காணிக் கொமிஷனர் காரியாலயத்திற்கு விவசாயப் பசளை கொடுத்தல்

காணி, நீர்ப்பாய்ச்சல், மின்சார அமைச்சின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரினால் 1965 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிவரையும், 30.3.66 ல் முடிவடையும் வருடத்திற்கான விவசாயப் பசளை கொடுத்தலுக்குரிய விலைப் பட்டியல் ஏற்றுக்கொள்ளப்படும்.

விலைப்பட்டியல் யாவும் காலிமுக வீதி செக்ரெட்டறியட் கட்டிடத்திலுள்ள காணி கமிசனர் காரியாலயத்தில் முற்கட்டுப்பணமாக ரூபா 50 கட்டிப் பெற்றுக்கொள்ளும் பத்திரத்திலேயே விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

கிடைக்கப்பட்ட விலைப்பட்டியலில் ஒரு பகுதியையோ முழுவதையும் நிராகரிப்பதற்கு காணி, நீர்ப்பாய்ச்சல், மின்சார அமைச்சு கேள்விப் பத்திரச் சபைத் தலைவர் அதிகாரம் பெற்றவராவர்.

இந்த கேள்விப்பத்திர அறிவித்தல் சம்பந்தமாக தேவையான விபரங்களை கீழ் கையொப்பமிட்டுள்ள அதிகாரியின் காரியாலயத்தில் தெரிந்துகொள்ளலாம்.

சீ. ஜே. சேரசிங்கா,
காணிக் கமிசனர்.

காணிக் கமிசனர் காரியாலயம்,
கொழும்பு,
1965 ம் ஆம் ஆகஸ்ட் மீ 28 ந உ.

9-103—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

---

## இலங்கைப் புகையிரதப் பகுதி

நிலக்கரியை இறக்கவும் குவிக்கவும் பின்னர் டெமட்டக்கொட நிலக்கரி நிலையத்திலிருந்து கொழும்புக்கும் அண்மைப் பகுதிகளுக்கும் 1965 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதி முதல் 1966 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ம் திகதி வரையுள்ள காலத்தில் விநியோகிப்பதற்குமான கேள்வி ஒப்பந்தப் பத்திரங்கள் 1965 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22 ம் திகதி புதன்கிழமை வரையும் போக்குவரத்து அமைச்சின் ஒப்பந்தப் பத்திரச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் மருதானைப் புகையிரதக் களஞ்சியப் பகுதியிலிருந்து பெற்றுக் கொண்ட படிவங்களில் இரு பிரதிகள் கொடுக்கப்பட வேண்டும். ஒப்பந்தப் படிவங்களை 1965 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21 ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிவரை உறுதிப்பணமாக செலுத்திய ரூ. 50/- க்கான பற்றுச் சீட்டைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வுறுதிப் பணத்தை மருதானையில் உள்ள பிரதான கணக்காளர் அலுவலகத்திலோ, அன்றில் கொழும்புக்கு வெளியிலுள்ள எந்தக் கசசேரிகளிலோ செலுத்திப் பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ளலாம். மேற்கொண்டு விபரங்கள் மருதானை புகையிரதக் களஞ்சியப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

எம். சறீன்,
புகையிரத அதிபருக்காக.

கொழும்பு,
1965 ம் ஆம் ஆகஸ்ட் மீ 27 ந உ.

9-120—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

---

## கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கைத்தொழில் பொருட்காட்சிசாலை கூடத்தை அழிப்பதற்கான கூறுவிலை

கொழும்பு, குதிரைப் பந்தய மைதானத்தில், கைத்தொழில் பொருட்காட்சிக்காக, இக்கூட்டுத்தாபனம் அமைத்த கட்டிடத்தை அழிப்பதற்கு அங்கீகாரம்பெற்ற ஒப்பந்தக்காரரிடமிருந்து கூறுவிலை கோரப்படுகிறது.

ஒப்பந்தக்காரர் கட்டிடத்தை அழிக்கும்பொழுது, கூட்டுத்தாபனத்திற்கு உரிமையான பொருட்களாகிய கண்ணாடிகள், உருக்குப் பொருட்கள், மரங்கள், கூரை வேய பாவித்த பொருட்கள் என்பவற்றை கவனமாகப் பிரித்து ஒரு பக்கத்தில் சேமித்து வைக்க வேண்டும்.

செங்கல்கள், கொங்கிறீற்று, மற்றும் கட்டு வேலைப் பொருட்கள் என்பவற்றை ஒப்பந்தக்காரர், அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்துவதுடன் குப்பைகளையும் அகற்றி, நிலத்தைச் சமதரையாக்கி, இடத்தை சுத்தமாக வைக்க வேண்டும்.

கூறுவிலையானது, பதிவுத் தபாலில், பொது முகாமையாளர், கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம், 70, யோர்க் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு, 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ந் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பவேண்டும். உறையின் மேற்புற இடது பக்க மூலையில், "கைத்தொழில் பொருட்காட்சிசாலைக் கூடத்தை அழிப்பதற்கான கூறுவிலை" எனக் குறிப்பிட வேண்டும்.

பொது முகாமையாளர்
கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

70, யோர்க் வீதி, கொழும்பு 1,
1965 ம் ஆம் ஓகஸ்ட் மீ 23 ந உ.

9-82—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

## கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்

**கொழும்புத் துறைமுகத்திலிருந்து வெலிசறையிலிருக்கும் கூ.மொ.வி. ஸ்தாபனக்கிட்டங்கிகளுக்கு கருவாடு கொண்டு செல்வதற்கும் கையாளுவதற்கும்**

மேல் குறிப்பிட்ட சேவைக்கு கேள்விப்பத்திரங்கள், 21, வக்சோல் வீதி, கொழும்பு 2 விருக்கும் பொது மேலாளரால் 1965, செப்டம்பர் 15 ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணி மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரத்தாள்கள் நன்மதிப்புள்ள வாகன ஒப்பந்தக்காரர்களிடமிருந்தே பெற்றுக்கொள்ளப்படும். விசேஷமாகத் துறைமுக அனுபவமும் போதிய அளவு குழப்பமின்றியும் திறமையுமுள்ள வாகனங்களும் தொழிலாளர் சேவையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

மற்ற விபரங்களும் கேள்விப்பத்திரங்களும் ரூபா 250 (ரூபா இருநூற்று ஐம்பதும்) கேள்விப்பதிர சேமிப்புப் பணம் கட்டி 85, மக்கலம் வீதி கொழும்பு 10 விருக்கும் கூ.மொ.வி. ஸ்தாபன வாகனப் பகுதி மேலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொது மேலாளர்,
கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்.

21, வக்சால் வீதி, கொழும்பு 2,
1965 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 24 ந உ.

9-81—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

**அகழி வெட்டும் இயந்திரம் ஒன்று வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்**
**கேள்விப்பத்திரங்களின் முடிபுகள்பற்றிய அறிவித்தல்**

| கிடைத்துள்ள கேள்விப் பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை | தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரரின் பெயர் | ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை |
|---|---|---|
| ஏழு (7) .. | பார்பர் கிறீன் ஓல்டிங் கம்பனி (வரை)—பெரிய பிரித்தானியா (முடிக்குரிய முகவர்க்கூடாக) | 11,481 பவுன்கள், 2 சிலின், 10 பென்ஸ்கள் |

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 7,
1965 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 24 ந உ.

டி. ஜே. இராமநாயக்க,
நீர்ப்பாசன அதிபருக்காக.

9-85—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

# ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 1965/66 ஆண்டுக்குரிய துறைவரி விற்பனவு

1965 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதியிலிருந்து 1966 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரையுள்ள கால எல்லைக்குள் மட்டக் களப்பு மாவட்டத்திலுள்ள கீழே குறிக்கப்பட்டுள்ள துறைகளின் ஆய வரிகள் பெறுவதற்கும் சகல போக உரிமைகளையும் வாங்குவதற்குமான கேள்விப் பத்திரங்கள் துறைவரி விற்பனவுக்குரிய நிபந்தனைகளுக்குட்பட இத்தால் கோரப்படுகின்றன.

ஒவ்வொரு கேள்விப் பத்திரத்தின் சார்பாகவும் எக் கச்சேரியிலாவது ரூபாய் நூறு (100/-) பிணையாகக் கட்டப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு கேள்விப் பத்திரத்துடன் அணைக்கப்படவேண்டும். இவ்வாறான பற்றுச் சீட்டு காட்டப்படுமிடத்து மட்டக்களப்புக் கச்சேரியில் வழங்கப்படும் மாதிரிப் பத்திரங்களின் மேலேயே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

“ மட்டக்களப்பு மாவட்டத்தில் .................... (இங்கே துறையின் பெயர் எழுதவும்) துறை விற்பனவு ” என்று இடதுபக்க மேல் மூலையில் எழுதப்பட்டு முத்திரை (சீல்) இடப்பட்ட தபால் உறைகளிலேயே ஒவ்வொரு கேள்விப் பத்திரமும், கிடைப்பதற்கான கடைசி நேரத்திற்கு முன்னதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்குக் கிடைக்கத் தக்கதாக அனுப்பப்படல் வேண்டும்.

1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 15 ந் திகதி புதன்கிழமை கீழே குறிக்கப்பட்ட நேரத்துக்குமுன் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படும். கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிப்பவர்கள் யாராவது அவ்வேளையில் இக் கச்சேரியில் சமுகம் கொடுக்க வேண்டும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில், கேட்டு விண்ணப்பிக்கும் கொந்திருத்தைத் திருப்திகரமாகக் கொண்டு நடத்தும் பொருளாதாரத் தகைமையுடையவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் தமது பிரிவுக்குரிய அரசாங்க அதிபரினாலோ பிரிவுக் காரியாதிகாரியாலோ கொடுக்கப்பட்ட அத்தாட்சிப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பகுதிக்குரிய உதவிக் கூட்டுறவு ஆணையாளரிடம் இருந்து தமது சங்கம் துறையை நடத்தி ஆயவரி அறவிடத் தகுதியுள்ளதென்றும் கேள்விப் பணத்தில் மூன்றில் ஒரு பங்கைப் பிணைப்பணமாகக் கட்டக் கூடிய நிதிவசதியுடையது என்றும் ஓர் அத்தாட்சிப் பத்திரத்தைக் கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் அவ்விடத்தில் விற்பனை நிபந்தனைகளுக்கிணங்கக் கையொப்பமிட்டு, வாங்கிய பெறுமதியில் மூன்றில் ஒரு பங்கைப் பணமாக அரசாங்க அதிபருக்குப் பிணைகட்டவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் விற்பனவு நிபந்தனைகட்கு இணங்கவோ பிணைகட்டுவதற்கோ பிணை உறுதிக்கு வேண்டிய தொகையைக் கட்டுவதற்கோ தவறுமிடத்து அவரினால் கொடுக்கப்பட்ட கேள்விப் பத்திரக் கட்டணத்தை அவர் இழந்தவராவார். அத்துடன் அவர் அரசாங்கத்தின்கீழ் எவ்வித கொந்திருத்து வேலைகள் செய்வதிலிருந்தும் தடுக்கப் படுவார். இவ்விதிவிலக்கைத் தவிர வேறு தேர்ந்தெடுக்கப்பட்ட கொந்திருத்துக்காரரினால் அல்லது கொந்திருத்துக்காரர்களினால் விற்பனை நிபந்தனைகள் கையொப்பமிடப்பட்டுப் பிணையும் கொடுக்கப்பட்டபின் மற்றையோரின் கேள்விப் பத்திரப் பணம் மீட்டுக் கொடுக்கப்படும்.

எவ்வித காரணமும் காட்டாது எக் கேள்விப் பத்திரத்தையும் அல்லது எல்லாக் கேள்விப் பத்திரங்களையும் ஏற்றுக்கொள்ளாதிருப்பதற்கான தனியுரிமை அரசாங்க அதிபருக்கே உரித்தாகும்.

தற்போது பாதைகள் வேலைசெய்யும் துறைகளுக்குப் பாதைகள் கொடுக்கப்படும். வள்ளங்கள் கிடைக்குமாயின் வள்ளங்கள் கொடுக்கப் படும். அவ்வாறு வள்ளங்கள் கிடைக்காவிடில் தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் சேவை திருப்திகரமாக நடைபெறுவதற்காகத் தம்முடைய சொந்த வள்ளங்களையே உபயோகிக்க வேண்டும்.

துறைவரி விதிகளின்படி தபால் கொண்டு செல்லும் சேவகர்கள் துறைக்கூலி செலுத்த வேண்டியதில்லை. தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக் காரர் தபாற் சேவகர்களிடமிருந்து துறைக்கூலி ஏற்கக்கூடாது.

மட்டக்களப்புக் கச்சேரிக்கு விண்ணப்பிக்குமிடத்து மேலதிக விபரங் களைத் தெரிந்து கொள்ளலாம்.

எஸ். வேலும்மயிலும்,
மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

மட்டக்களப்புக் கச்சேரி,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 26 ந உ.

| துறையின் விபரம் | காரியாதிகாரியின் பிரிவு | கேள்விப் பத்திரங்கள் முடிவடையும் நேரம் முற்பகல் |
|---|---|---|
| 1. வெருகல் .. | கோறளைப்பற்று .. | 9.30 |
| 2. பனிச்சங்கேணி .. | ஷை .. | 9.45 |
| 3. கிரான் .. | ஷை .. | 10.00 |
| 4. திமிலதீவு .. | மண்முனைப்பற்று வடக்கு .. | 10.15 |
| 5. வலையிறவு .. | ஷை .. | 10.30 |
| 6. மண்முனை .. | மண்முனை தெ. கி. எ. போ. ப. .. | 10.45 |
| 7. துவறநீலாவணை .. | ஷை .. | 11.00 |
| 8. அம்பிளாந்துறை .. | ஷை .. | 11.15 |

9-106—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## நொத்தாரிஸ்மார் சட்டம் 91 ம் அத்தியாயம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஊர்காவற்றுறை கரம்பன் மேற்கு சிதம்பரப்பிள்ளை கந்தையா ஆகிய நான் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ் நொத்தாரிசுவாக கடமை பார்க்க என்னை நியமிக்கும்படி இத்திகதி தொடக்கம் ஒரு மாதத்தின் பின் கொழும்பு பதிவு காரியகர்த்தர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்யவிருக்கின்றேன் என்பதை இதனால் அறியத்தருகின்றேன்.

கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை,
23.8.65.

சி. கந்தையா.

9–46—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

---

## அறிவித்தல்

சரவணை, வேலணை,
27.8.65.

### நொத்தாரிசுமார் சட்டம், 91 ம் அத்தியாயம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

சரவணை, விசுவநாதர் சேதுகாவலர், ஆகிய நான் யாழ்ப்பாண மாவட்டத்தில், தமிழ் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க, என்னை நியமிக்கும்படி, இத்தேதி தொடக்கம் ஒரு மாதத்தின் பின் கொழும்பு பதிவு காரியஸ்தர் தலைவர் அவர்கட்கு விண்ணப்பம் செய்யவிருக்கிறேன் என்பதை, இத்தால் அறிவிக்கின்றேன்.

வி. சேதுகாவலர்.

9–146—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

---

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

*அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்*

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

*1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.*

*2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

*3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.*

*4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.*

*5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.*

*6. "நகலை" கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக "ரைப்" அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.*

*7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.*

*8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறொக்றால்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.*

*10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கிகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1962 ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—*

| | | |
|---|---|---|
| | ரூ. | ச. |
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி ... ... | 10 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... | 110 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... | 220 | 0 |

*ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.*

*11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*12. வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.*

*13. சந்தா விபரம் 1.8.63 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.*

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 27 | 50 | ... | 40 | 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 17 | 50 | ... | 23 | 00 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் ... ... ... | 25 | 00 | ... | 33 | 00 |

*ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.*

*தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்*

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | சதம் | | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 30 | ... | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 60 | ... | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 15 | ... | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 30 | ... | 15 |

*இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற்பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.*

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.